

கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 18.9.2024 புதன்கிழமையன்று சென்னையில் நடைபெற்றது. தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளர் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அணியின் இணைச்செயலாளர், மாநில துணைச் செயலாளர்கள், மண்டல பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.



கழக முன்னாள் அமைப்புச் செயலாளர் – எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் மனைவி மறைந்த ஜாக்குலின் அவர்களின் உடலுக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

### கழகத் தலைவர் ஆணைப்படி - 2026 சட்டமன்றத் தேர்தலில்

# 200 இடங்களுக்கு மேல் வென்றிட சமூக வலைதளப் பயிற்சி!

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணிக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப். 20-

கழகத் தலைவர் ஆணைப்படி, 2026 சட்டமன்றத் தேர்தலில், 200 இடங்களுக்கு மேல் வென்றிட, சமூக வலைதளப் பயிற்சி, இளைஞரணிச் செயலாளரின் முயற்சிகளுக்கு உறுதுணை என தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திராவிட நாயகர் - கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 18.9.2024 புதன்கிழமையன்று சென்னையில் நடைபெற்றது. தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளர், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அணியின் இணைச் செயலாளர், மாநில துணைச் செயலாளர்கள், மண்டல பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசனைக் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தீர்மானங்கள்:

1. பவள விழா காணும் நம் கழகம் இன்னும் பல நூறாண்டுகள் தமிழ்நாட்டிற்கும் - தமிழ் மக்களின் ஏற்றத்துக்கும் பாடுபடும் வகையில், பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டு முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் பாதுகாக்கப்பட்டு, நம் திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான ஒரே நம்பிக்கையாகத் திகழும் தி.மு.க. எனும் பேரியக்கத்தின் தொடர் பயணத்தில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணி களத்திலும் சமூக வலைதளத்திலும் அயராது பாடுபடும், இளம் தலைவர் அவர்களின் முயற்சிகள் அனைத்திற்கும் துணை நிற்கும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

2. நடந்து முடிந்த 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் தி.மு.கழகம் தலைமையிலான அணி 40க்கு 40 தொகுதிகளையும் வென்றிட வியூகம் வகுத்து, அதனை நிறைவேற்றும் வகையில் ஒயாது உழைத்து, நாடாளுமன்றத்தில் இந்தியா கூட்டணியை வலிமையான எதிர்க்கட்சி அணியாகவும், பா.ஜ.க.வை மைனாரிட்டி அரசாகவும் மாற்றியதில் முதன்மைப் பங்காற்றிய திராவிட நாயகர் - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களை கழகத் தகவல் தொழில்நுட்ப அணி வாழ்த்தி மகிழ்வதுடன், கழகத் தலைவரின் வெற்றி இலக்கை முழுமையாக அடைவதற்கு நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் அயராது பாடுபட்டவரும், சட்டமன்றத் தேர்தல் இலக்கை எட்டும் வகையில் கழக ஒருங்கிணைப்புக் குழுவை திறம்பட நடத்திவரும் கழகத்தின் இளந்தலைவர் இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மேலும் பல புதிய உயர் பொறுப்புகளில் உச்சங்களைத் தொட்டுப் பணியாற்றிட கழகத் தகவல் தொழில்நுட்ப அணி என்றும் உறுதுணையாக இருக்கும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

3. தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக F4 கார் பந்தயத்தை பல தடைகளையும் விமர்சனங்களையும் தகர்த்து எறிந்து உலகமே வியக்கும் வகையில் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் வெற்றிகரமாக நடத்திய கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்த கூட்டம் மனதார வாழ்த்தி மகிழ்ந்து இந்தப் பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

4. கழகப் பவள விழா ஆண்டின் முப்பெரும்விழாவில் பெரியார் விருது பெற்ற திருமிகு. பாப்பம்மாள், அண்ணா விருது பெற்ற அறந்தாங்கி மிசா இராமநாதன், கலைஞர் விருது பெற்ற திருமிகு. ஜெகத்ரட்சகன் எம்.பி., பாவேந்தர் விருது பெற்ற திருமிகு. தமிழ்தாசன், பேராசிரியர் விருது பெற்ற திருமிகு. வி.பி.இராசன் ஆகிய கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து, பவள விழா ஆண்டில் முதன் முதலாக அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள திராவிட நாயகர் கழகத் தலைவர் அவர்கள் பெயரிலான விருதுக்கு மகிழ்ச்சியையும், அதனைப் பெற்றுள்ள ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம் அவர்களுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

5. நூற்றாண்டு நாயகர் - முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பெருமையை இந்தியா முழுமையும் அறியும் வகையில், கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியிட்டுச் சிறப்பித்ததற்கும், அதற்கான விழாவை இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் தலைவர் கலைஞரின் சாதனைச் சரித்திரத்தை எடுத்துரைக்கும் வகையில் நடத்திக் காட்டியதற்கும் கழகத் தலைவர் முதலமைச்சர் நம் திராவிட நாயகன் அவர்களைப் பாராட்டி கழகத் தகவல் தொழில்நுட்ப அணி இத்தீர்மானத்தை நிறைவேற்றுகிறது.

6. வாய்ப்புக்களின் நாடு என அழைக்கப்படும் அமெரிக்காவிற்குச் சென்று ரூபாய் 7,616 கோடி மதிப்பு முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாடு முழுவதும் பரவலாக்கப்பட்ட வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் சென்னை, கோவை, மதுரை உள்பட பல இடங்களிலும் புதிய தொழிற்சாலைகள் உருவாகிடவும், அதன் மூலம் 11,566 பேருக்கு புதிதாக வேலை வாய்ப்புகள் கிடைத்திடவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ள திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து அவரது ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார இலக்கு நிறைவேறிட தகவல் தொழில்நுட்ப அணி உறுதுணையாக இருக்கும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

7. எதிர்வரும் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலுக்கு முன்னதாக தகவல் தொழில்நுட்ப அணியை மேலும் வலிமைப்படுத்தி, அடுத்த 6 மாதங்களுக்குள் 1,58,714 புதிய நிர்வாகிகளை நியமித்து, கழகத்தின் தொடர் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் வலுவானக் கட்டமைப்பை உருவாக்குவோம் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

8. சமூக வலைத்தளத்தில் கழக தகவல் தொழில்நுட்ப அணியும் கழகத்தின் மற்ற அணிகளும் சீரிய முறையில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக கழக மாவட்டங்கள்தோறும் பயிற்சிக் கூட்டங்கள் 3 மாதங்களுக்குள் நடத்தி முடிக்கப்படும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

9. தமிழ்நாடு முழுவதும் அணி செயலாளர் தலைமையில் மண்டல வாரியாக திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம் நடத்த தீர்மானிக்கப்படுகிறது.

10. ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் கோப்புகள் இனி இந்தி மொழியில் அனுப்பப்படும் என்கிற அறிவிப்புக்கு தகவல் தொழில்நுட்ப அணி கடும் கண்டனத்தைத் தெரிவிப்பதுடன், ஒன்றிய அரசின் இந்தித் திணிப்புக்கு எதிரான கண்டனத்தை இந்திய அளவில் முன்னெடுக்கும் வகையில் சமூக வலைதள செயல்பாடுகளை மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மாமன்னன் ராஜேந்திரசோழனுக்கு கங்கைகொண்ட சோழபுரத்தில்

# ரூ.22 கோடியில் அருங்காட்சியகம் அமைக்க உத்தரவிட்ட முதல்வருக்கு நன்றி!

## பாராட்டு விழாவில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரை!

அரியலூர், செப். 20-

அரியலூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆ.சங்கர் தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் முன்னிலை வகித்து உரையாற்றினார்.

ஜெயங்கொண்டம் சுபம் திருமண மண்டபத்தில் "மாமன்னன் ராஜேந்திர சோழனுக்கு கங்கை கொண்ட சோழபுரத்தில் ரூபாய் 22 கோடி மதிப்பீட்டில் அருங்காட்சியகம்" அமைக்க உத்தரவிட்ட, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி அறிவித்தல் மற்றும் பாராட்டு விழாவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மற்றும் ஓய்வு பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு. இராஜேந்திரன் அய்.ஏ.எஸ். வாழ்த்துரை வழங்கி மாமன்னன் ராஜேந்திர சோழனின் வரலாறுகளை எடுத்துக் கூறி சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன், நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.மணிமாறன், ஆர். கலியபெருமாள், காங்கிரஸ் கட்சி சீனி. பாலகிருஷ்ணன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் க.தர்மதுரை, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி, மாவட்ட தகவல்தொழில்நுட்ப அணி அமைப்பாளர் குலோத்துங்கன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.வசந்தபகலவன், நகர கழக நிர்வாகிகள் எஸ்.ராஜமாணிக்கம், முரசொலி குமார், ஞானபிரகாசம், பா.ரமேஷ், கொளஞ்சியப்பா, கு.பிரபாகரன், மா.செ.செந்தில்குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் ராஜசேகரன், ஜெகநாதன், மனோகரன், கங்காதரன், சாமிநாதன், கண்ணன், சக்திவேல், அறிவழகன், அறிவு, ஆனந்தராஜ் கழக நிர்வாகிகள் விஜி, ஆனந்தகுமார், குமரவேல், நடராஜன், அபிஷேக் மற்றும் தி.மு.க., காங்கிரஸ் கட்சி மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### அ.தி.மு.க.வின் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளால் சீர்கெட்ட

# கூத்தா நல்லூர் பேருந்து நிலையம் - ரூ.1.44 கோடியில் நவீன வடிவம்!

## திராவிடமாடல் ஆட்சியில் மக்கள் பயன்பாட்டிற்கு வந்தது!

திருவாரூர்,செப். 20 -

கழக ஆட்சியில் கட்டப்பட்டது என்கிற ஒரே காரணத்தால் பொதுமக்களின் கோரிக்கையையும் புறம் தள்ளி பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படாமல் அரசியல் காழ்ப்புணர்ச்சியால் கடந்த அ.தி.மு.க. அரசால் வீணடிக்கப்பட்ட கூத்தாநல்லூர் பேருந்து நிலையம், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் அவர்களின் தொடர் முயற்சியால் திராவிட மாடல் ஆட்சியில் நவீன வடிவமைப்பில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கூத்தாநல்லூர் நகரப்பகுதியில், போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், மக்கள் சிரமமின்றி பேருந்து பயணம் மேற்கொள்ளவும் பொதுமக்கள், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களிடம் பொதுமக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, கழக ஆட்சியில் கூத்தா நல்லூர் மத்தியில் அழகிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. அந்த பேருந்து நிலையம் அமைக்கப்பட்ட பின் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் விளைவாய் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு அந்த பேருந்து நிலையம் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டது என்கிற ஒரே காழ்ப்புணர்ச்சியால் அதனை பயன்பாட்டிற்கு கொண்டுவராமல் கிடப்பில் போட்டது.

தொடர்ந்து மக்கள் போராடியும் அப்போதைய அ.தி.மு.க. அரசு செவிமடுக்கததால் , புதிய பேருந்து நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு வராமலேயே சிதிலமடைந்தது. கூத்தாநல்லூர் வட்டார மக்கள் திருவாரூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் பூண்டி கே.கலைவாணனிடம் வைத்த இந்த பேருந்து நிலைய கோரிக்கையை, தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களிடம் கொண்டு சென்ற நிலையில், அந்த கோரிக்கையை தாயுள்ளத்தோடு பரிசீலித்த முதல்வர் தளபதி அவர்கள் உடனடியாக கூத்தாநல்லூர் பேருந்து நிலையம் அமைய உத்தரவிட்டார்கள் .

அதன்படி பூண்டி கே. கலைவாணன் எம். எல்.ஏ.அவர்களின் பெரும் முயற்சியால் கூத்தாநல்லூர் பேருந்து நிலையம் நவீன வடிவில் 1.44 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு, தற்போது திறப்புவிழா கண்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் பூண்டிகே. கலைவாணன் தலைமையேற்று இந்த புதிய பேருந்துநிலையத்தை திறந்து வைத்தார். நகர செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி, நகர்மன்ற தலைவர் பாத்திமா பஷீரா மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்த பேருந்துநிலையம் மீண்டும் பயன்பாட்டிற்கு வந்தமைக்கு தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கும் , சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் அவர்களுக்கும் பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

மேலும் கூத்தால்லூர் நகரப்பகுதிகளில் அப்துல் ரஹ்மான் சாலையில் அமைக்கப்பட்ட நியாய விலை கடை, மரக் கடை, லெட்சுமாங்குடி, மேலப்பனங்காட்டான் குடி ஆகிய பகுதிகளில் பயணிகள் நிழலகம், தொட்டாச்சேரி பகுதியில் உள்ள திருவாசல் குளம் புணரமைப்பு , நாகங்குடி குளம், சித்திக் நகர் பூங்கா ஆகிய வற்றையும் , பெரிய கடைத்தெரு மற்றும் வண்டிப்பேட்டையில் தினசரி அங்காடி அமைக்க அடிக்கல்நாட்டி பணிகளையும் கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் முன்னிலையில் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவைத்தார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட, மாநகர தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும், மாநகர செயலாளர் ஆ.செந்தில் முன்னிலையிலும் கழகக் கொடியேற்றி ஊர்வலமாக சென்று புதுக்கோட்டையில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது. நிகழ்வில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், அக்ரி கணேசன், கே.ஆர்.என்.போஸ், க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, சுப.சரவணன், சு.சண்முகம், மேயர் திலகவதி செந்தில், என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், தவ . பாஞ்சாலன், மு.கா.ராமகிருஷ்ணன், ஆர்.ஆர்.சாமிநாதன், சி.சண்முகம், எம்.எம்.பாலு, இராம.செல்வராஜ், ஆர்.பாலகிருஷ்ணன், அ.ரெத்தினம், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எம்.பாலமுருகன், தவசுமணி, வே.ராஜேஸ், செந்தாமரை பாலு, சி.அரங்கநாயகம், எம்.சுப்பையா. கவிவேந்தன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய,மாநகர,பேரூர், கிளைக், வட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்,

### கலைஞர் விட்டுச் சென்ற பல்வேறு திட்டங்களை

# தமிழ்நாடு முதல்வர் செய்து கொண்டு இருக்கிறார்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!

செஞ்சி , செப் 20 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்த நாள் நிறைவு விழாவை முன்னிட்டு செஞ்சி பகுதிகளில் பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஏற்பாட்டில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதில் கிட்டப்பார்வை தூரப்பார்வையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து அவர்களுக்கு இலவசகண் கண்ணாடி வழங்கும் நிகழ்ச்சி செஞ்சி திருவண்ணாமலை சாலையில் நடைபெற்றது.



நிகழ்ச்சிக்கு செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தார்.

நகர செயலாளர் கார்த்திக் அனைவரையும் வரவேற்றார் .

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு கண் கண்ணாடிகளை வழங்கி சிறப்புரை யாற்றினார் .

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

கல்விக்கண் திறந்த காமராஜர் என்று சொன்னதை போல் கண்ணொளி திட்டத்தை அறிவித்து ஏழை எளிய மக்களுக்கு கண்கண்ணாடியை வழங்கியவர் கலைஞர் என்றும் முதன் முதலில் மக்களுடைய கண் பார்வை சரியான முறையில் தெரிந்து கொள்வதற்காக பல்வேறு இலவச கண் சிகிச்சை முகாம்களை நடத்தி அறுவை சிகிச்சை செய்து அவர்களுக்கு கண்ணொளி திட்டத்தில் மூக்குகண் கண்ணாடியை வழங்கிய கலைஞர் சொன்ன திட்டங்களை எல்லாம் செய்துள்ளார் .

அந்த வகையில் கலைஞர் விட்டுச்சென்ற திட்டங்களையும் பணிகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார் அதையும் கடந்து ஐந்தாவது தலைமுறையாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் பார்வை குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழும் காலம் எல்லாம் கண்ணொளி திட்டத்தில் கண் கண்ணாடியை வழங்குவோம் என அவர் உறுதிப்பட தெரிவித்தார் .

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க. ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், பொருளாளர் நெடுஞ்செழியன். பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஜான் . பாஷா, சிவகுமார் , நிர்வாகிகள் மாவட்ட சிறுபான்மை பிரிவுஅணி அமைப்பாளர் அன்சாரி, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, மாவட்ட ஆதிதிராவிடர்நல அணி துணை அமைப்பாளர் சேகர், தொண்டரணி பாஷா கோகுல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.